காலை முரசு

பக்கங்கள் 24

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 15 ஞாயிற்றுக்கிழமை 29.06.2025 | அதிர்வு 329

## மாயமான 5 மீனவர்களில் இருவர் சடலங்களாக மீட்பு

### இருவர் உயிருடன் மீண்டனர்



மாத்தறை மாவட்டத்தின் தேவேந்திர முனை துறைமுகத்தில் இருந்து

03



# செம்மணிப் புதைகுழியில் மேலும் 3 எலும்புக்கூடுகள்

## இதுவரை 27 மனித என்புத் தொகுதிகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று சனிக்கிழமை மேலும் மூன்று மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 27ஆக அதிகரித்துள்ளது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் நாள் அகழ்வு நேற்று நடைபெற்றது.

நேற்று மேலும் மூன்று மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை அகழ்ந்து எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

03



# செம்மணியில் இராணுவத்தின் எலும்புக்கூடுகளாம்

## இப்படிச் சொல்கின்றார் முன்னாள் எம்.பி. அக்மீமன தயாரத்ன தேரர்

"யாழ். செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை மீளத் தோண்டுவதன் மூலம் இவர்கள் எதிர்பார்ப்பது என்ன? விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள்கூட அங்கு இருக்கக்கூடும்."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார்.

03




யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விடயங்கள் குறித்து இன்று பிரஸ்தாபிப்பேன் என நேற்றுத் தெரிவித்திருந்தேன்.

நேற்று முன்தினம் அங்கு நடைபெற்றது என்ன கூட்டம், என்ன நிகழ்ச்சி நிரல் என்பவை தெரியாமலேயே பலரும் அவசரப்பட்டு அந்நிகழ்வு குறித்து அறிக்கையிட்டனர்.

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சபையின் முதலாவது கூட்டத்தில் உப குழுக்கள் தெரிவு இடம்பெற வேண்டும். இங்கே ஒரு குழுவில் ஆறு பேர் மட்டுமே அங்கம் வகிக்க முடியும். இதற்கேற்ப மாநகர சபையின் முதலாவது மாதாந்தக் கூட்டம்

03



# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை; நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும்

## பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் உறுதி

"இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பொறுப்புடன் இடம் பெற்று வருகின்றன. இந்த விடயத்தில் நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும்."

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும், சட்டமா அதிபர் திணைக்களத்தினரும் கூட்டாகச் செயற்பட்டு வருகின்றனர்.

பிரதான சூத்திரதாரி யார் என்பது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பல முக்கியமான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. பிரதான சூத்திரதாரிகளை மட்டுமல்ல, அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களையும் நாங்கள் நீதியின் முன்பாக நிறுத்துவோம்.

கத்தோலிக்க மக்களின் கவலைகளும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் அதிருப்தியும் நியாயமானவை. அவரின் கருத்துகளுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். எமக்கும் கால அவகாசம் அவசியம். எது எப்படி இருந்தாலும் நிச்சயம் பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படும்."

– என்றார்.

# யாழ். மாவட்ட விமானப் படைத் தளபதி வடக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை யாழ். மாவட்ட விமானப் படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற குறூப் கப்டன் செனவிரத்ன சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

கடந்த 23 ஆம் திகதி நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இடம்பெற்றபோது 3 குழுக்களில் இரு குழுக்கள் நியமிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் 3 ஆவது குழுத் தேர்வில் இணக்கம் ஏற்படவில்லை. அதன் காரணமாக 27 ஆம் திகதிக்கு (அதாவது நேற்று முன்தினம்) அன்றைய கூட்டத்தின் தொடர்ச்சி இடம்பெறும் எனத் தெரிவித்து அந்தக் கூட்டம் அப்போது ஒத்தி வைக்கப்பட்டது. நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திற்கான அழைப்பிலும் இவ்விடயம் – முன்னைய கூட்டத்தின் தொடர்ச்சி – என்று குறிப்பிடப்பட்டே இருந்தது.

இவ்வாறு நேற்று முன்தினம் கூட்டம் ஆரம்பமாகி 23 ஆம் திகதி ஒத்தி வைத்த 3 வது சட்ட பூர்வமான குழுவுடன் மேலும் 4 குழுக்கள் தனித் தனியாக தேர்வு செய்யப்பட்டு குழுக்கள் முன்மொழியப்பட அவை வழிமொழியப்பட்டன. அதன்படி நிகழ்ச்சி நிரலில் இறுதியில் இருந்த விடயமும் நிறைவு செய்யப்பட்டு, மாநகர முதல்வர் கூட்டத்தை ஒத்தி வைத்து இருக்கையால் எழுந்து வாசலை நோக்கிச் சென்றபோதே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவர் வழிமறித்து குறுக்கே அமர்ந்து ஏனைய விடயங்கள் என்ற ஒரு பதத்தின் கீழ் சில விடயம் பேசச் சந்தர்ப்பம் தர வேண்டும் என ஆரவாரம் பண்ணினார். அதே கட்சியின் இன்னுமோர் உறுப்பினரும் குரல் எழுப்ப, தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் அதில் இணைந்து கொண்டனர்.

ஆக, 23ஆம் திகதிக் கூட்டத்தின் எஞ்சிய பகுதி 27 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் முடிவடைந்ததை அடுத்து, நிகழ்ச்சி நிரல் பூர்த்தியானமையால், உரிய படி கூட்டத்தை முடித்தார் நகர முதல்வர்.

ஆனால் இதற்கு இடையில் நல்லூர் கோவில் சம்பந்தமாக சில விடயங்களை நுழைத்து, குழப்பம் பண்ணத் திட்டமிட்ட சில உறுப்பினர்கள், நிகழ்ச்சி நிரலில் இல்லாத அந்த விடயத்தை கூட்டத்தில் புகுத்துவதற்கு மாநகர முதல்வர் இடம் தராதமையால், பிழையான கோணத்தில் அதைக் குழப்பமாக்கி, அதை விவகாரமாக்க முயற்சித்தார்கள். அதுதான் முடிவடைந்த அந்தக் கூட்டத்தில் குழப்பம் நிகழ்ந்ததாகக் காட்டும் நிலைமையை ஏற்படுத்தியது.

இதன் பின்பு மாநகர முதல்வரின் அறைக்குச் சென்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவர், ஆணையாளர் முன்னிலையில் பெரும் குரலில் சத்தமிட்டார். நல்லூர் ஆலயம் ஏதோ சூழலில் உள்ள மக்களுக்கும், ஆலயத்துக்கு வரும் அடியவர்களுக்கும் பெரும் அநீதி இழைப்பது போன்றும், அவர்களின் இஷ்டத்திற்கு ஆட இடமளிக்க முடியாது, அதனை மாநகர சபை அனுமதிக்க கூடாது, அவர்கள் கேட்பது போன்று வர்த்தமானி அறிவிக்க இணங்கக் கூடாது, சபையை வெளியில் இருப்பவர்கள் வழிநடத்த இடமளிக்க வேண்டாம் என்று உரத்துக் கத்திய சத்தங்கள் அலுவலகத்திற்கு வெளியே கேட்டன.

உள்ளே மேலும் பல விடயங்கள் உரையாடப்பட்டிருக்கலாம். இவையே வெளியே கேட்டமையால் இவற்றையே சபையில் பிரஸ்தாபிக்க முனைந்துள்ளனர் என்பதை ஊகிக்க முடிந்தது.

இது தொடர்பில் மாநகர முதல்வரை கேட்டபோது நல்லூர் ஆலய உற்சவத்தில் எந்த ஒரு குறைகளுக்கும் இடம் அளிக்கப்படமாட்டாது, புனிதம் பேணல் நடவடிக்கைகளிற்கோ அல்லது மரபுகளிற்கோ நாம் இடையூறாகச் செயல்படமாட்டோம், அத்தோடு அதற்கு எவர் முனைந்தாலும் அதற்கும் இடம் கொடுக்கப்படவும் மாட்டாது. – என்றார்.

---

**மாயமான...**

புறப்பட்ட மீன்பிடிப் படகு ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து காணாமல்போன 5 மீனவர்களில் இருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் எனவும், இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

தேவேந்திரமுனை துறைமுகத்தில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காகச் சென்ற எம்.டி.ஆர் 263 தினேஷ் 4 என்ற பல நாள் மீன்பிடிப் படகு, ஒரு வர்த்தகக் கப்பலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மீன்பிடிப் படகில் இருந்த ஐவர் காணாமல்போயிருந்தனர்.

காணாமல்போனவர்களைத் தேடும் பணிகளில் கடற்படையினர் ஈடுபட்டிருந்த நிலையில் அவர்களில் ஒருவர் நேற்றுக் காலை உயிருடன் மீட்கப்பட்டார். இரு மீனவர்கள் நேற்றுப் பிற்பகல் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இந்நிலையில், காணாமல்போன மற்றுமொரு மீனவர் நேற்று மாலை உயிருடன் மீட்கப்பட்டு காலித் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மேலும் ஒருய மீனவர் காணாமல் போயுள்ள நிலையில் அவரைத் தேடும் பணிகளில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தெற்கு பகுதியில் களுத்துறையிலக் இருந்து புறப்பட்ட மீன்பிடிப் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த மீனவர்கள் இருவர் காணாமல்போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

**செம்மணியில்...**

செம்மணி ரணமனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“யாழ்ப்பாணம் – செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் தற்போது மீண்டும் பேசப்படுகின்றது. இந்த விகாரம் மீளத் தோண்டப்படுவதன் நோக்கம்தான் என்ன? இந்த நாட்டில் போர் நிலவியது. பயங்கரவாதம் இருந்தது. மக்கள் கொல்லப்பட்டனர். படையினர் கொல்லப்பட்டனர். அழிவுகள் ஏற்பட்டன. கடைசியில் படையினர்தான் போரை முடிவுக்கு கொண்டுவந்து அமைதியை ஏற்படுத்தினர்.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருப்பவை யாருடைய சடலங்கள்? பூநகரி மற்றும் ஆனையிறவு மோதலின் போது படையினர் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டனர். சில உடல்களே கிடைக்கப்பெற்றன.

எனவே, செம்மணியில் மீட்கப்படும் மனிதச் சிதிலங்கள் இராணுவத்தினருடையவை என எம்மால் கூறமுடியும்.

செம்மணிப் புதைகுழியை எதற்காக மீண்டும் தோண்டிக் கொண்டிருக்கின்றனர். இந்த விடயத்தைத் தோண்டத் தோண்ட அது யாசகனின் காயங்கள் போல் மாறிவிடும். எனவே, அரசும், தமிழ் அரசியல்வாதிகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.” – என்றார்.

---

**செம்மணிப் புதைகுழியில்...**

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை மொத்தமாக 27 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 22 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.


மேலும், மனிதப் புதைகுழி அமைந்திருக்கும் இடத்தில் மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்வதற்காகச் சட்ட வைத்திய அதிகாரிகளால் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றம் அதற்கான அனுமதியை வழங்கியிருந்தது. அதன்பிரகாரம் மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்வதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இருந்து ஒரு குழு வருகை தந்து மண் மாதிரிகளைப் பெறவுள்ளது. அவர்களுடன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இரசாயனவியல் பீட பேராசிரியர்களும் இணைந்து செயற்படவுள்ளனர்.

செய்மதிப் படங்கள் மூலம் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சில இடங்கள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த இடங்களும் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்று துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








# ஐ.நா. ஆணையரின் வருகை புலிகளின் நிகழ்ச்சி நிரலே!

## முன்னாள் அமைச்சர் விமல் விஷமத்தனம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கை அரசைச் சிக்கவைக்கும் நோக்கிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைப் பயணம் அமைந்துள்ளது என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கை தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது வழக்கமான ஒன்றாக அமைந்துள்ளது. தம்மால் எடுக்கப்படும் பாரதூரமான முடிவுகள் சரியானவை என்று காண்பித்துக்கொள்வதே இதன் நோக்கம்.

அதாவது தாம் இலங்கைக்குச் சென்று, பல தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடி, அதற்கமையவே அறிக்கை தயாரிக்கப்பட்டது எனக் கூறிக்கொள்வதே அவர்களின் எண்ணம். இதற்கு முன்னரும் இதுவே நடந்துள்ளது. நவநீதம்பிள்ளை, அல் ஹுசைன் ஆகியோரும் வந்தனர்.

அனைத்து தரப்பினரையும் சந்தித்தோம் என அவர்கள் கூறினாலும் பிரிவினைவாதிகளையும், அடிப்படைவாதிகளையுமே மட்டுமே சந்தித்தனர். அவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்திலேயே அறிக்கையும் வெளிவந்தது.

தற்போதைய ஆணையாளரும் அதே வழியில்தான் வந்துள்ளார். யாழ்ப்பாணத்துக்குச் சென்று உயிரிழந்தவர்களையும் நினைவுகூர்ந்துள்ளார். வடக்கில் உள்ளவர்கள் மட்டுமா இறந்தனர்? புலிகளால் மக்கள் கொல்லப்படவில்லையா? வடக்கில் படையினரின் உடல்கள் இல்லையா? கொல்லப்பட்ட பொலிஸாரின் உடல்கள் இல்லையா?

செம்மணியில் புலிக்கொடிகளுடன்தான் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. பாதுகாப்புதரப்பில் இருந்த முன்னாள் அதிகாரிகள் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமையாளரை சந்திப்பதற்கு அனுமதி கோரியிருந்தனர். அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. சில சட்டத்தரணிகள் குழுவும் கோரி இருந்தது. அந்தக் கோரிக்கையும் ஏற்கப்படவில்லை. தேசியவாத அமைப்புகளுக்கும் இடமளிக்கப்படவில்லை. மாறாக புலிகளின் சித்தாந்தத்துடன் செயற்படும் நபர்களுடன் மட்டுமே சந்திப்பு நடந்துள்ளது.” - என்றார்.

# யாழ்.மாவட்ட அதிகாரிகளுக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம்!

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மேலதிக மாவட்ட செயலர் உட்பட சில பிரதேச செயலகங்களின் செயலாளர்கள் பதவி உயர்வுடன் இடமாற்றம் பெறவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இதன்படி யாழ்ப்பாணம் மேலதிக மாவட்ட செயலராகக் (காணி) கடமையாற்றிய ஸ்ரீமோகனன் மின்மற்றும் எரிசக்தி அமைச்சின் மேலதிக செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலாளர் சிவசிறீ மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் சத்தியசீலன் வடக்கு மாகாண சபைக்குப் பதவி உயர்வு பெற்றுச் செல்லவுள்ளனர்.

நெடுந்தீவுபிரதேசசெயலாளர்திருமதி நிவேதிகா அஞ்சல் திணைக்களத்துக்குப் பதவி உயர்வு பெற்றுச் செல்லவுள்ளார்.

வேலணை பிரதேச செயலாளர் சிவகரன் மேலதிக மாவட்ட செயலாளராகப் (நிர்வாகம்) பதவி உயர்வு பெறவுள்ளார்.

இதேவேளை, நெடுந்தீவு, வேலணை, கோப்பாய், பருத்தித்துறை பிரதேச செயலகங்களுக்குப் புதிய பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

# குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக ஷானி அபேசேகர

## பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் நியமனம்



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திருமதி இமேஷா முத்துமாலை கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணி - சித்துப்பாத்தி மயானத்தில்

# சடலங்கள் எரியூட்டப்படும் போதும் கைவிடப்படாத அகழ்வுப் பணிகள்!

## அர்ப்பணிப்பான பணிக்காகப் பலரும் பாராட்டு



யாழ். செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் பெரும் சிரமத்துக்குள்ளும் அசௌகரியமான சூழ்நிலைகளுக்குள்ளும் அர்ப்பணிப்புடன் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் குழுவினருக்குப் பொதுமக்களும் சிவில் செயற்பாட்டாளர்களும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியில் மீண்டும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. தற்போதைய அகழ்வுப் பணிகளின் போதும், இதற்கு முன்னரும் அசௌகரியமான – அசாதாரணமான சூழ்நிலைகளில் பணிகள் இடைவிடாது மேற்கொள்ளப்படுகின்ற விடயம் தெரியவந்துள்ளது.

குறிப்பாக, அகழ்வுப் பணிகள் இடம்பெறும் மனிதப் புதைகுழியில் இருந்து கூப்பிடு தூரத்திலேயே மயானத்தின் எரியூட்டும் கொட்டகை உள்ளது. இதனால், சடலங்கள் எரியூட்டப்படும் வேளைகளில் நிலவும் அசாதாரண சூழலின்போதும் பணியாளர்கள் பணிகளைத் தொய்வின்றியும் பின்னடைவு இல்லாமலும் நிறைவேற்றி வருகின்றனர்.

இந்த விடயத்துக்குப் பல தரப்பினரும் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளனர்.




# சர்வதேச தமிழ்ப் பண்பாடு மாநாடு யாழ். பல்கலையில் நாளை ஆரம்பம்

**(எஸ்.நிதர்ஷன்)**

பன்னாட்டு பிரமுகர்கள் பங்கேற்கும் அனைத்துலக தமிழ்ப் பண்பாடு மாநாடு நாளை 30 ஆம் திகதி முதல் ஜுலை 6 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், நுவரெலியா, கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது என்று இந்த மாநாட்டின் இணைப்பாளரும் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் க.பாஸ்கரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று சனிக்கிழமை ஊடக சந்திப்பை முன்னெடுத்த அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த மாநாட்டின் ஆரம்ப விழா நாளை 30ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சற்குணராசா, கௌரவ விருந்தினர்களாக இந்திய துணைத் தூதுவர் எஸ். சிறி சாய் முரளி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுசா முருகேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சாதனையாளர் விருது வழங்கல், நூல் வெளியீடு, கருத்தரங்கு நிகழ்வுகள், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

மாநாட்டுக்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையுடன் இணைந்து தஞ்சாவூர் அனைத்துலக பண்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு திருநெறி தமிழ் சைவசமய பாதுகாப்புப் பேரவை, இலண்டன் தமிழ்க் கல்வியகம், இலண்டன் உலகச் செம்மொழித் தமிழ் சங்கம், பிரான்ஸ் இந்திய வம்சாவளி மக்களுக்கான அமைப்பு ஆகியன ஒன்று சேர்ந்து ஏற்பாடு செய்துள்ளன.

நிகழ்வில் சுவிட்சர்லாந்து, கனடா, இங்கிலாந்து, நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ் மலேசியா, சிங்கப்பூர், ரீயூனியன் தீவுகள், தென்ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை, ஜுலை 2 ஆம் திகதி நுவரெலியா மாவட்ட செயலக மண்டபத்திலும், ஜுலை 6 ஆம் திகதி கொழும்பு மயூரபதி ஸ்ரீபத்ரகாளி அம்மன் ஆலய பண்பாட்டு கலையரங்கிலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கொள்ளுப்பிட்டி பிஷப் கல்லூரி அரங்கில் ஸ்வேஷ்மா தஷிந்தனின் அரங்கேற்றம்

சுந்தரேசர் கலைக்கோவில், பரதநாட்டிய நன்மணி ஸ்ரீமதி சுகன்யா நித்தியானந்தனின் மாணவியும் தஷிந்தன் பஞ்சநாதன் – திருமதி தீபா தஷிந்தன் தம்பதியின் புதல்வியுமான ஸ்வேஷ்மா தஷிந்தனின் பரதநாட்டிய அரங்கேற்றம் திருகோணமலை தென்கயிலை ஆதீனம், குருமகா சந்நிதானம், தவத்திரு அகத்தியர் அடிகளார் முன்னிலையில் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை கொள்ளுப்பிட்டி பிஷப் கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராகப் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரியவும், விசேட விருந்தினர்களாக “வீரகேசரி” பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன் மற்றும் வத்தளை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சமிலா ரூபசிங்க ஆகியோரும் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கையின் பலபாகங்களிலும் இருந்து புகழ்பூத்த சிரேஷ்ட நடன ஆசிரியர்கள் கலந்து கொள்வர்.

# பசுமை அமைதி விருதுகள் விழா இன்று வீரசிங்கம் மண்டபத்தில்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகளை வழங்கும் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கடந்த ஆண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகளும், 2024ஆம் ஆண்டின் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளர் தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

2024ஆம் ஆண்டில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்க உழவர் மதிப்பளிப்பும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தாவராவதானி மதிப்பளிப்பும் இதன்போது இடம்பெறவுள்ளன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் யோ.நந்தகோபன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன், வடக்கு மாகாணத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எந்திரி ச. சர்வராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையில் சுற்றுச் சூழல் சார்ந்து வழங்கப்பட்டு வரும் விருதுகளில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வரும் பசுமை அமைதி விருதுகள் முன்னிலை விருதுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டுத் தப்பிச் செல்லவில்லை

## பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தகவல்




கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பில் இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த கொலை சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டுத் தப்பிச் செல்லவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சந்தேக நபரைப் பற்றிய சில தகவல்கள் ஏனைய சந்தேக நபர்களின் மூலம் தெரியவந்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறுகின்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கவலைக்குரிய நிலைமை

இலங்கையில் யுத்தத்தின் இறுதி கட்டத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களுக்கு - யுத்தக் குற்றங்களுக்கு - மனித உரிமை மீறல்களுக்கு - நீதி காண்பது மற்றும் பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தச் செய்வது போன்ற விடயங்களில் ‘சாண் ஏற முழம் சறுக்கும்’ நிலைமையாக விடயம் தொடர்ந்து இழுபடுகின்றது.

‘வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழி உடைந்த கதையாக’ இப்போது இது விடயத்தில் சற்று முன்நகர்வு ஏற்பட சேர்ந்தே பின்னடைவும் வருகிறது.

ஒருபுறம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்து, செம்மணி மனிதப் புதைகுழி உட்பட பல விடயங்களை நேரில் அவதானித்து செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கை தொடர்பான புதிய பிரேரணை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அடுத்த செப்டெம்பர் அமர்வில் பரிசீலனைக்கு எடுக்கப்பட இருக்கிறது. அப்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பான தனது அவதானிப்பு அறிக்கையை காத்திரமாக முன்வைத்தால், பொறுப்புக் கூறல் தொடர்பான இலங்கை மீதான கடப்பாட்டை அங்கத்துவ நாடுகள் அழுத்தமாக முன்னெடுக்கும் வகையில் இலங்கை தொடர்பான தீர்மானம் அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இந்தச் சமயத்தில்தான் உலகளாவிய ரீதியில் போர் குற்ற விசாரணை விவகாரங்களுக்கு அமெரிக்க வெளியுறவு துறையால் வழங்கப்பட்டு வரும் நிதி குறைப்புச் செய்யப்படுவதான செய்தி வெளியாகியிருக்கின்றது. இது இலங்கை போன்ற நாடுகளில் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நீதி கிடைப்பது மற்றும் பொறுப்புக் கூறலை நிலை நாட்டுவது தொடர்பான முயற்சிகளை பலவீனப்படுத்தி பின்னடையச் செய்யும் என்று இப்போது விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மியான்மர், சிரியா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், ஈராக், நேபாளம், இலங்கை, கொலம்பியா, பெலாரஸ், சூடான், தெற்கு சூடான், ஆப்கானிஸ்தான் மற்றும் காம்பியா ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் உட்பட கிட்டத்தட்ட இரண்டு டசின் உலகளாவிய போர்க்குற்றங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் திட்டங்களுக்கான அமெரிக்க நிதியைக் குறைக்க வெள்ளை மாளிகை பரிந்துரைத்துள்ளதாக புதன்கிழமை ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முன்னைய ஆட்சி காலம் போல இப்போதும் அவர் பதவியேற்றதும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இருந்து அமெரிக்கா வெளியேறிவிட்டது. அதனால் இலங்கை விவகாரத்தில் இணைத் தலைமை நாடுகளின் பொறுப்பில் இருந்தும் அந்த நாடு வெளியேறி இருந்தது.

ஆயினும், இலங்கையை பொறுப்புக் கூற வைக்கும் கவுன்ஸிலின் நடைமுறைத் திட்டத்திற்கான நிதிஒதுக்கீடுகள் ஏற்கனவே செய்யப்பட்டு விட்டமையினால் அந்த நடவடிக்கைத் திட்டத்தின் ஒரு கட்டமாக யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை இடம்பெற்றமை தொடர்பான சான்றுகள், ஆதாரங்கள், ஆவணங்கள், சாட்சியங்கள் போன்றவற்றைப் பதிந்து, சேகரித்து, ஆவணப்படுத்தும் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை தொடர்பாக இப்போது நிறைவேற்றப்பட இருக்கும் புதிய பிரேரணை முன்னைய தீர்மானத்தை தொடர்வதானதாக அமைந்தால், இந்தத் திட்டம் தடையீடின்றி முன்னெடுக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்த வைப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் புதிய திட்டங்கள், எத்தனைங்கள், வழிவகைகளுக்கான முயற்சிகள் அமெரிக்க நிதிக்குறைப்பினால் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

ஈழத் தமிழர்களின் நிலைமை பெரிதும் கவலைக்குரியதுதான்.

# வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜனின் ஐம்பதாவது அகவை வாழ்த்து நிகழ்வு

“வீரகேசரி“ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் கடந்த 17 ஆம் திகதி ஐம்பதாவது பிறந்த தினத்தை கொண்டாடியமையை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை மாலை சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் ஒன்றிணைந்து ஒரு மாலை நேர ஒன்று கூடல் சந்திப்பு மற்றும் வாழ்த்தும் நிகழ்வை வெள்ளவத்தை மிராஜ் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

**(படப்பிடிப்பு: ஜே.சுஜீவகுமார்)**

































வி.எஸ்.சிவகரன்

# மனித உரிமைகள் ஆணையரும் ‘அணையா விளக்கும்’!

“வல்லோன் வாழ்வான் வலியோன் வீழ்வான்“ எனும் கோட்பாடு சகல விடயத்திற்கும் சாலப் பொருந்துகின்றது. பொருள் முதல்வாத உறவுகளும் பதவி முதல் வாத அணி சேர்க்கையுமே சமூகக் கட்டமைப்பின் இருப்பை ஒழுங்கு படுத்துகின்றன.

எண்ணிக்கையே ஜனநாயகத்தின் இருப்பை தீர்மானிக்கின்றது. அதுதான் சமூகத்தின் மேலாதிக்க முடிவாகவும் நிறைவுறுத்தப்படுகிறது.

ஆண்டான் – அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டதாக கூறப்பட்டாலும், வர்க்க வேறுபாடுகள் இல்லாத சமூகக் கட்டமைப்புகள் என பறைசாற்றப்பட்டாலும், சமூக சம நீதி என்பது நலனியலின் அடிப்படையிலும் இருப்பியலின் வலிமைத்தனத்தாலுமே வகுக்கப்படுகின்றன.

எழுத்து வடிவில் நீதி, நியாயம், நேர்மை, சமத்துவம், சமூக நீதி என ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமை நிரல் படுத்தப்பட்டாலும் சமூக வழக்காறுகளில் அவை வெறும் ஏட்டு வார்த்தைகளாக கோவைகளில் உறங்குகின்றன.

அதிகாரமும் பணமும் நடப்பு விவகாரம் யாவற்றையும் நகர்த்துகின்றன.

இவ்வாறு தான் உலகம் முழுவதும் அதிகார வலுச் சமநிலை மனித உரிமைகளின் மகத்துவத்தைப் பேணுதல் எனும் உயர்ந்த தத்துவார்த்த கோட்பாட்டை முன்னிறுத்தி இருந்தாலும், நடைமுறையில் இவை யாவும் சாத்தியமா என்ற கேள்வி சாமானியர்களுக்கு எப்பொழுதும் எட்டாத கனியாகவே காணப்படுகிறது.

காலனித்துவ அடக்குமுறைக்கு பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியமே உலகம் முழுவதும் வியாபித்து ஆட்கொண்டு அடக்கி ஆழ முற்படுகிறது. உலகளாவிய பூகோள அரசியலும் இதற்கு விதிவிலக்கு அல்ல. உலக ஒழுங்கு என்பது பிராந்திய, பூகோள அரசியலின் நலன் சார் இருப்பை தக்க வைத்துக் கொள்ளும் தேவையின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

அவ்வாறுதான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகமும் வெறும் கவலை வெளியிடும் அறிக்கைச் சங்கமாகவே தொடர்ந்து இயங்கி வருகிறது.

வல்லமை உள்ள நாடுகள் தமது உறவுக்கு அப்பால் உள்ள நாடுகள் மீது அதிகாரத்தை உபயோகிப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் ஊடாக தலையிடுவதற்கான ஓர் அமைப்பாகவே எந்த வகையிலும் வல்லமை இல்லாத ஒரு அமைப்பை வல்லாண்மையுள்ள நாடுகள் உருவாக்கி வைத்திருக்கின்றன.

இந்த ஐக்கிய நாடுகள் சபையால் உலகத்தில் எந்த யுத்தத்தையோ, ஏனைய மனித உரிமை மீறல்களையோ, இனச்சுத்திகரிப்பையோ, இன அழிப்பையோ, கட்டமைக்கப்பட்ட இன அழிப்பையோ, பட்டவர்த்தனமான அடிப்படை உரிமை மீறலையோ தடுக்க முடிந்திருக்கிறதா? கவலை தெரிவிக்கின்றோம், வருந்துகின்றோம், கண்டிக்கின்றோம் என்கின்ற வார்த்தைகளே மனித உரிமைகள் ஆணையத்தின் ஆகக்கூடிய சொற்களாகவே காணப்படுகின்றன. இல்லையேல் வலிமை உள்ள நாடுகள் தமது அதிகாரத்தை இந்த வழிமுறை ஊடாக உபயோகிக்கின்றார்கள். ஈராக், இலங்கை, ஆப்கானிஸ்தான், சோமாலியா, பாலஸ்தீனம், ரஷ்யா, உக்கிரேன், மியான்மார், இந்தியா, பாகிஸ்தான் இங்கெல்லாம் மத அடக்குமுறைகள், இன வெறிப் பாகுபாடுகள், சாதிய வகுப்புவாதங்கள் என உலகம் முழுவதும் அதிகார துஷ்பிரயோகங்களும் அடக்குமுறைகளும் அதனால் வன்முறைகளும் சர்வ சாதாரணமாக நிகழ்கின்றன.

பாதிக்கப்பட்ட தரப்புகள் – நீதிக்காக போராடுகின்ற இனக் குழுமங்கள் – எவருக்காவது இந்த உலகம் நீதி வழங்கி இருக்கிறதா? உலக ஏகாதிபத்தியத்தின் கைப்பாவையாக இருக்கக்கூடிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம் இதுவரை உறுதியாக ஏதாவது செய்து உள்ளதா? அறிக்கைச் சங்கமாகவே அது

காணப்படுகின்றது. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை முடிவுற்ற மூன்றாவது நாள் 21 மே 2009 ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம்

தொடர்ச்சி ▼

# மனித உரிமைகள் ஆணையரும் ‘அணையா விளக்கும்’!

தொடர்ச்சி ▲

பான் கீ மூன் இலங்கைக்கு வந்து, உலங்கு வான் ஊர்தி மூலம் முள்ளிவாய்க்கால்ஒ பிரதேசத்தையும் பார்வையிட்டுச் சென்றிருந்தார்.

அப்பொழுது பல விடயங்களை நடைமுறைப் படுத்த வேண்டும் என வலியுறுத்தி இருந்தார். அதில் எதுவுமே இதுவரை நடைமுறைக்கு வர வில்லை.

முப்பதுன் கீழ் ஒன்று தீர்மானம் தொடக்கம் இன்று ஒரு தசாப்தம் கடந்து மனித உரிமை ஆணையத்தில் பல்வேறு விதமான தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகின்றன. அவற்றினால் பாதிக்கப்பட்ட தரப்புக்கு ஏதாவது நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவான வாய்ப்பு உருவாக்கப்பட்டதா? இல்லை. காலத்துக்கு காலம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வந்து பாதிக்கப்பட்ட தரப்பினரை சந் திப்பதுதான் தொடர்கின்றது.

சுற்றுலா பயணிகள் போல் தான் அவர்க ளும் வருகிறார்கள். போகிறார்கள். தற்போதைய ஆணையாளரும் கடந்த வாரத்தில் ஒரு சுற்று லாவாகவே அனைவரையும் சந்தித்து விட்டுச் சென்றார். நடந்தது என்ன? நடக்கப்போவது என்ன? ஏனெனில் முள்ளிவாய்க்கால் இனப்படு கொலையை நடத்தியவர்கள் இன்று உலகத்திற்கு நீதி சொல்லும் கனவான்களே. அதேபோல் உலகம் முழுவதும் உள்ள யுத்தத்திற்கும் வன்முறைக்கும் நீதி சொல்லக் கூடியவர்களும் அதே கனவான்களே. மறைமுகமாக ஆயுத வியாபாரிகளை ஊக்கு விப்பதும் அதே கனவான்களே. ஆகவே சாத்தான் வேதமாகவே ஓதுகிறார்கள்.

கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லி ணக்க ஆணை குழுவால் முன்வைக்கப்பட்ட பல தீர்மானங்களை தமிழர் தரப்பும் வரவேற்று இருந்தது. அவை 16 ஆண்டுகள் கடந்தும் இதுவரை நடை முறைப்படுத்தப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட் டோருக்கான பரணகம ஆணைகுழுவினால் முன் வைக்கப்பட்ட முன்மொழிவுகள் எதனை யும் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தொடர்பாக ஐ.நாவின் தனிநபர் விசாரணை, தரிசுமன் அறிக் கையிலும் முன்வைக்கப்பட்ட விடயத்தை கூட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் நடை முறைப்படுத்த வலியுறுத்தவில்லை. தற்போதைய சூழ்நிலையில் உலகில் பல இடங்களிலே மனித குலத்துக்கு எதிரான யுத்தங்களும் சுரண்டல் களும் இடம் பெறுகின்றமையால் இலங்கையில் நடந்த இனப்படுகொலை என்பது பேசுபொருள் அற்ற நிலையை உருவாக்கியுள்ளது. காலத்தால் மறக்கப்படுவதும் நினைக்கப்படாத வெளித்தோற்ற மாதிரிகளை அகற்றி விடுவதன் ஊடாகவும் கால நீட்சி மருந்தாக அமையும் என இந்த உலகம் எண்ணுகின்றது போலும்.

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சம னானது எனும் கோட்பாட்டையே இந்த உலகம் செயற்படுத்த முனைகிறது.

நீதி இல்லாத, அறம் இல்லாத இந்த உலகத் திடமிருந்து இனப்படுகொலைக்கான நீதி கிடைக் கும் என்றோ மனித புதை குழிக்கான நியாயம் கிடைக்கும் என்றோ எள்ளளவும் நம்ப முடியாது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை அர சாங்கம் சகல இடங்களுக்கும் அனுப்பி பலதரப் பட்டவர்களையும் சந்திக்க வைப்பதன் ஊடாக தாங் கள் உலகத்துக்கும் பாதிக்கப்பட்ட தரப்பிற்கும் மனித உரிமை மதிக்கக் கூடியவர்கள் என்கின்ற அபிப் பிராயத்தை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

தமிழ் மக்கள் மத்தியிலே நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதன் மறைமுக நிகழ்ச்சி நிரல் செம்மணி புதைகுழி வரை ஆணையாளரை அனுமதித்தது. அதனால் என்ன பயன் கிடைக்கப் போகிறது?

தமிழ் தரப்பிடம் ஆணையாளர் மிகத் தெளிவாக கூறிவிட்டார். இலங்கை விவகாரம் வலிமையான பேசு பொருளாக இருப்பதற்குரிய வாய்ப்புக் குறைவு என்று. அப்படியாயின் ஏன் இலங்கைக்கு வந் தார் என்ற கேள்வியை எழுப்பி இருக்க வேண்டும். சுற்றுலா பயணிகள் போல் இப்படி கடந்த 15 ஆண்டுகளில் பலர் எங்கள் கண்ணீரை மூலதனம் ஆக்கி இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட தரப்பிற்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. இனியும் இந்த உலகம் இந்த மனித உரிமை அமைப்புக்கள் நீதி பெற்றுத் தரும் என நம்புவது கடலில் உப்பை கரைப் பதற்கு ஒப்பானது ஆகும்.

யுத்தத்திற்கு பின்னர் பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டன. அவௌ ஊடகங்களுக் குச் செய்திகளாகின. அரசியல்வாதிகளுக்கு தேர்தல் மேடைக்கு உபயோகிக்கப்பட்டன. காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகளின் கண்ணீர் வீணாகியது. சட்டப் பார்வைகளும், வைத்தியஒ போர்வைகளும் எமது உணர்வுகளை மழுங்கடித்தன. யாரிடம் நீதி கேட்பது? கொன்றொழித்தவர்களிடம் நீதியை எதிர் பார்க்க முடியுமா? செம்மணியில் மனிதப் புதைக் குழிக்கு எதிராக உலகின் கவனத்தை ஈர்ப்பதற் கும் மனித உரிமைகள் ஆணையாளரை வர வழைப்பதற்கும் முன்னெடுக்கப்பட்ட “அணையா விளக்கு” போராட்டம் அடிப்படையில் வரவேற் புக்குரியது. ஆனால் அதன் ஏற்பாட்டாளர்கள் முதிர்ச்சியற்ற இளையோர்கள் என்பதனால் அதனை ஒழுங்குபடுத்துவதில் தவறிழைத்து விட்டனர். மிகப்பெரிய ஊடக வியாபிப்பு இருந்த போதிலும், மக்கள் ஆயிரக்கணக்கில் அணி திரளவில்லை. அவ்வாறு அணி திரண்டவர்கள் மத்தியிலும் அரசி யல்வாதிகளை ஒரு குழு தமது நிகழ்ச்சி நிழலின் அடிப்படையில் விரட்டியமை ஏற்புடையது அல்ல. போராட்டக்காரர்கள் போராட்டத்தை தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். வெளியாள் கள் தலையீடு செய்வதை நிறுத்தி இருக்க வேண் டும். அண்மைக் காலத்தில் தமிழ்த் தேசியத்திற் குச் சார்பான போராட்டங்கள், கூட்டங்கள் இலக்கு களை அடையாமல் இடைவெளியில் வழிப்போக்கர் களால் இவ்விதமான குழப்பங்கள் ஏற்படுத்தப்படு கின்றன. தியாகி, துரோகி பட்டங்களை யார் யாருக்கு கொடுப்பது? இன்றைய அரசியல் கணக்கில் இதன் பயன் என்ன? அரசியல்வாதிகளை விரட்டியதே மக்கள் மத்தியில் தலைப்புச் செய்தியாகியது. போராட்டமும் போராட்டத்தின் நோக்கமும் காணா மல் போய்விட்டன. எதிரியின் விருப்புக்கு வாய்ப் பளிப்பதாகவேதான் சிலருடைய செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன.

இவ்வாறு போராட்டங்களை மலினப்படுத்துவது எதிர்காலத்தில் ஜனநாயகக் குரல்களை அடக்கி ஒடுக்குகின்ற செயல்பாடாகவே முடிந்து விடும். கொழும்பை மையமாகக் கொண்டு வடக்கு, கிழக் கிலே கிளைகளை வைத்து காசு கொடுத்து போராட் டத்தை நடத்தும் ஓர் அமைப்பு அந்த மக்களினு டைய உண்மையான உணர்வுகளை கொச்சைப்

தொடர்ச்சி ▼

# மனித உரிமைகள் ஆணையரும் ‘அணையா விளக்கும்’!

**தொடர்ச்சி ▲**

படுத்தி, ஏனைய தரப்புகளால் பணம் வழங்காமல் போராட முடியாது என்கின்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் மற்றுமொரு வடிவம் தான் போராட்டங்களை குழப்புவது. தமிழர்கள் மத்தியில் இவ்வாறான உணர்ச்சிவசக்காரர்களால் தமிழினத்திற்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

“அணையா விளக்கு” முடிவில் அணைந்து போன விவகாரமாகவே மடை மாற்றி விட்டார்கள். ஜனநாயகத்தில் போராடுவது என்பது பற்றி மகாத்மா சாந்தி தனது போராட்டக் குழுவைக் கலைத்து விட்டு இரண்டு ஆண்டுகள் பயிற்சி வழங்கியமை போல் ஜனநாயகத்தில் போராடுவது எப்படி என்பதனை பலருக்குப் புரிய வைக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

இவ்வாறான அமாவாசையில் பிறந்த அரிஸ்டோட்டில்களால்தான் தமிழினம் மேலும் பல வீனமடைகின்றது. அர்த்தமில்லாத உணர் வடிமை அரசியல் எமது இருப்பை அசைத்துப் போடும் என்பதனை அறியாமல் இருப்பதே அறிவார்ந்த அரசியலோடு முரண்பட்டுக் கொள்கிறது. தமிழினம் தன்னைத்தான் தகவமைத்துக் கொண்டு, தனது இருப்பைத்தானே பற்றுதிக்குட்படுத்தும் பணியில் நிலைநிறுத்தாவிட்டால் இனத்துவ அடையாள அரசியலில் பெரும் விளைவைச் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எதிர்காலத்தில் ஏற்படும் என்பதே கசப்பான உண்மை. ■




# காக்கைதீவு கழிவு கொட்டும் பகுதியில் நேற்று இரவு ஏற்பட்ட பாரிய தீ விபத்து!

## அதனை அணைக்கும் செயற்பாட்டில் யாழ். மாநகரசபை உறுப்பினர் சாருஜன்

காக்கைதீவுப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் நேற்று இரவு (28) பாரிய தீ விபத்து இடம்பெற்றது.

இதனால் அந்தப் பகுதி புகை மூட்டமாகக் காணப்பட்டது. அத்துடன் அயலில் குடியிருக்கும் மக்களும் பெரும் சிரமம் அடைந்தனர்.

இந்த நிலையில் அந்தப் பகுதியில் வதியும் பொது மகன் ஒருவர் இரவு 9 மணியளவில் யாழ். மாநகர சபையின் ஆளுங்கட்சி சுகாதாரக் குழு உறுப்பினர் சி. சாருஜனைத் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் விரைந்து நடவடிக்கை எடுத்த உறுப்பினர், சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட அவர், யாழ். மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு அங்கு தீயைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அவசர உதவிகளை வழங்குமாறு கோரினார்.

இவரது கோரிக்கையை அடுத்து விரைந்து செயற்பட்ட மாநகர சபை, தீணை அணைப்பதற்குத் தேவையான தண்ணீர் பௌசரை அனுப்பி வைத்தது.

விரைந்து செயற்பட்ட யாழ். மாநகர சபையின் ஊழியர்கள் தண்ணீர் பாய்ச்சித் தீயை அணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நள்ளிரவு 12 மணிக்குப் பின்னரும் தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்தில் நின்ற உறுப்பினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டவண்ணம் இருந்தார்.

# நாட்டை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

தற்போதுள்ள கட்டமைப்பிற்குள் சீர்திருத்தங்களை மேற்கொள்வதை விட, நாட்டை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கடந்த அரசியல் கலாசாரத்தை மாற்றம் செய்து தற்போதைய அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கல் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அது நிலையானதாக உருவாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நாட்டின் அனைத்து துறைகளையும் புதிய நிலைக்கு உயர்த்தவும் இதே போன்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நாட்டை ஒரு புதிய நிலைக்கு உயர்த்துவதற்காக செயல்படுத்தப்படும் திட்டத்தில் பொது போக்குவரத்து சேவையை வலுப்படுத்துவதில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது என்றும், சிறிய அரசாங்கங்களுக்கும் தனிப்பட்ட அதிகார வர்க்கத்தினர்களுக்கும் தங்கள் விருப்பப்படி போக்குவரத்து சட்டங்களை செயல்படுத்த அனுமதிக்கப்படாது என்றும், வலுவான போக்குவரத்து சட்ட முறையை அறிமுகப்படுத்தி செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

அதேசமயம் பொதுச் சொத்துக்கள் திருடப்படுவதைப் பற்றி ஒரு சமூகமாக நாம் அஞ்ச வேண்டும் என்றும், அனைவரும் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.



ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடை–பெற்ற ‘Dream Destination’ 100 ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின் தொடக்க விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, தினமும் சுமார் எட்டு பேர் வீதி விபத்துகளில் உயிரிழப்பதாக புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துவதாக மேலும் சுட்டிக்காட்டினார்.

வலுவான போக்குவரத்து சட்ட கட்டமைப்பின் ஊடாக,வீதி விபத்துகளைத் தடுக்கவும், போக்குவரத்து நெரிசலைத் தடுக்கவும், நச்சு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், வாகன இறக்குமதிக்காக செலவிடும் அரசாங்கத்தின் பாரிய செலவைக் குறைக்கவும் உதவும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதன்படி, நாட்டின் பொதுப் போக்குவரத்து கட்டமைப்பை மேம்பட்ட, வசதியான மற்றும் திறமையான சேவையாக மாற்றும் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக அரசாங்கம் மேற்கொண்ட முதலீடுகளுக்கு மேலதிகமாக, தனியார் துறைக்கு முதலீட்டு வாய்ப்புகளும் திறக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இன்றைய காலத்திற்கு ஏற்றவாறு நாட்டின் ரயில் நிலையங்களை புதிய தனித்துவத்துடன் முத்திரை பதிக்க அரசாங்கத்துடன் இணையுமாறு தனியார் துறையினருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா ஆகியவை இணைந்து தனியார் துறையின் ஆதரவுடன் 100 ரயில் நிலையங்களை பொது–தனியார் கூட்டுத் திட்டமாக நவீனமயமாக்கும் திட்டம் தொடங்கப்பட்டது.


விசேட தேவைகள் உள்ள சமூகம் உட்பட அனைத்து பயணிகளின் பாதுகாப்பையும் வசதியையும் உறுதி செய்யும் சுத்தமான, அழகான ரயில் நிலைய கட்டமைப்பை நாட்டில் உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்போது, வீதிப் பாதுகாப்பு செயல் திட்டத்தை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் கையளித்தார்.










# வாசகரின் வாசகத்தை மனமுருகிப் படிப்போம்!

## இன்று மணிவாசகர் குருபூசை

ஆதியந்த மில்லா அருருளான சோதியை
அதிமதுரத் தமிழினில் அமர்த்தினார் வாசகர்
தேசமே வியந்தேற்ற திவ்ய திருவாசகமாய்
மலர்ந்துமே வந்து மனமமர்ந்து நிற்கிறது

வாதவூர் பிறந்தார் மனமெல்லாம் இறையே
சோதனையை வாதவூரர் சுகமாகக் கண்டார்
காதலுடன் கடவுளை கைகூப்பி நின்றார்
கையணைத்துக் கடவுளும் கரையேற்றி விட்டார்

மந்திரியாய் இருந்தார் மனமெல்லாம் சிவனே
மாணிக்கம் வைரம் மனமேற்க வில்லை
பார்க்கு மிடமெங்கும் பரமனே தெரிந்தார்
பாடினார் வாசகத்தைப் பரமனுமே ஏற்றார்

அதிகாரம் வாதவூரர் அகம் ஏறவில்லை
ஆணவம் அவரிடத்து அணுகிடவும் இல்லை
அகமுழுக்க அரனே அமர்ந்துமே இருந்தார்
ஆசையில்லா நிலையினிலே வாதவூரர் வாழ்ந்தார்

பக்தியின் பக்குவத்தைப் பலவாறு பாடினார்
பாடிய அத்தனையும் பசுந்தமிழின் சொத்தே
தத்துவம் இருந்தது தர்க்கமும் இருந்தது
இத்தரையில் யாவர்க்கும் ஏற்றதாய் அமைந்தது

மதங்கடந்து பலபேரும் மனமேற்றி நின்றார்
மாபெரும் தத்துவத்தை வாசகரே மொழிந்தார்
தேனாகாத் தித்திக்க திரு வாசகத்தை
ஊனுருக உவந்தளித்தார் உளமுருகி வாதவூரர்

வாசகரின் வாசகத்தை மனமுருகிப் படித்தால்
மனமாசு அகன்றோடும் மாவெளிச்சம் வந்துவிடும்
சித்தம் தெளியும் சிவனருளும் கிடைக்கும்
நித்தம் படிப்போம் நிம்மதியைப் பெற்றிடுவோம்



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

# செயற்கை நுண்ணறிவு பயன்பாடு தொடர்பில் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு தெளிவூட்டல்









அரச சேவையை ஒரு பயனுள்ள மற்றும் செயற்திறனான சேவையாக மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பது குறித்து கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வு நேற்று கல்வி அமைச்சில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் முதன்மைத் திட்டமான அரச சேவையை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்தின் ஆரம்ப அணுகுமுறையாக அதிகாரிகளை தெளிவுபடுத்துவதும் மற்றும் தயார்படுத்துவதும் அரச சேவைக்குள் செயற்கை நுண்ணறிவுகுறித்தசாதகமானஅணுகுமுறையை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும்.

நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க, செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதன் ஊடாக கல்வித் துறையின் தரத்தை காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்த முடியும் என்று கூறினார்.

இங்கு ஆரம்ப உரையாற்றிய டிஜிட்டல் பொருளாதாரம் குறித்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய, அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தில் கல்வி அமைச்சின் பங்கு, கல்வி அமைச்சில் செயற்கை நுண்ணறிவை எவ்வாறு பயன்படுத்தலாம் மற்றும் அதற்காக திட்டமிடப்பட்ட தொழில்நுட்ப மாற்றங்கள் குறித்து உரையாற்றினார்.

ஜனாதிபதி அலுவலகம், டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை இணைந்து இந்த செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தன. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான ஹர்ஷ புரசிங்க மற்றும் சமிச அபேசிங்க ஆகியோர் வளவாளர்களாக இணைந்தனர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பவளவிழா காணும் தில்லை!

-எஸ். எம் .வரதராஜன்-

மூத்த ஊடகவியலாளர் எஸ் தில்லை நாதன் இன்று (29) தமது எழுபத்தைந் தாவது அகவை நாளைக் கொண்டாடு கிறார்.

யாழ்ப்பாண நிருபர், பருத்தித்துறை நிருபர், புலோலி நிருபர் , கரவெட்டி நிரு பர், வடமராட்சிச் செய்தியாளர் எனப் பலவகை உப பதவிப் பெயர்களுடன் இலங்கைத் தமிழ் நாளிதழ் வரலாற் றில் மட்டுமல்ல ஒலிபரப்பு, மின்னூடகங் களில் உலா வந்தவர் அவர்.

புலோலி என்ற பெயரை வீரகேசரியில் அவர் தமது செய்தி நிருபர் பிரிவின் பெயராக வைத்ததற்கான காரணமும் உண்டு.

புலவர்கள் வாழ்ந்த ஊர் என்பதால் புலோலி எனப்பட்டது. புலோலி பழம் பெரும் பாரம்பரியத்தையும் நீண்ட புரா தன மொழி, சமய கலாசார மரபு விழுமி யங்களையும் தனித்துவமாகத் தன்ன கத்தே கொண்ட புகழ்பூத்த நகரம் ஆகும்.

எனது ஊடக வாழ்வில் வயதில் மூத்த நண்பராகவும் ஒரு குருவாகவும் ஆலோசகராகவும் திகழ்ந்தவர்களில் முக்கியமானவர் தில்லை அண்ணர். தொலைக்காட்சித் துறை இலங்கை யில் அறிமுகமாகி அது குழந்தையாகத் தவழ்ந்த வேளையில் டெய்லி நியூஸ் பத் திரிகையில் வந்திருந்த ரூபவாஹினி விளம்பரத்தைப் பற்றி எனக்குச் சொல்லி என்னை அந்தப் பதவிக்கு விண்ணப்பிக் கும்படி ஊக்குவித்தவர் தில்லைநாதன் அண்ணர்.





தினசரி வரும் தமிழ், ஆங்கிலத் தின சரிகளில் வரும் கட்டுரைகள் செய்திகள் என்பவற்றை மட்டுமன்றி முக்கியமான விளம்பரங்கள் வந்தாலும் அவற்றை மனதில் பதிவிட்டுக் கொள்ளும் ஆற்றல்மிக்கவர்.

பதினெட்டு வயதில் மலையகத்தில் இருந்து அமரர் கே. ஜீ. மகாதேவாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த செய்தி வார இதழுக்கு நிருபராகத் தம் ஊடகப்பணியை ஆரம்பித்த தில்லை அண்ணர், அமரர்கள் கே. சிவப்பிர காசம், ஆர். சிவகுருநாதன், எஸ். டி சிவநாயகம் , எஸ். சபாரத்தினம், எம். வி. கானமயில்நாதன் என மூத்த ஊடக ஆளுமைகளின் தலைமைத்துவத்தின் கீழ் உள்ளூர் நிருபராகப் பணியாற்றிய பெருமையுடன் இன்றுவரையாக ஊடகப் பணியில் பொன்விழாக்கண்ட ஊடகராக சிறப்புப் பெறுகிறார்.

ரூபவாஹினி நேர்முகத்தேர்வுக்குப் போன பின்னர் அதில் நான் தெரிவு செய்யப்பட்ட அறிவித்தல் வந்தும் சுமார் ஒருவருடமாக பயங்கரவாதப் பிர தேசத்திலிருந்து விண்ணப்பித்த காரணத் தைக் காட்டி ரூபவாஹினி என்னை அழைப்பதைத் தாமதப்படுத்திய பொழுது, யார் அங்கு பணிப்பாளர் சபை உறுப்பினராக இருக்கிறார் அதற்கு யாரைப் பிடித்தால் காரியத்தை செய்து முடிக் கலாம் என்ற சூட்சுமங்கள் தெரிந்தவராக ஆலோசனை சொன்னவர் தில்லை.


வடமராட்சியைச் சேர்ந்த பலர் அப் போது அரச திணைக்களங்கள், அமைச் சுக்களில் உயர் பதவிகளில் பணியாற் றியிருந்ததால் ஊடகர் என்ற முறையில் இந்த விடயங்களில் வியாபகமான அறிவை அவர் பெற்றிருந்தார்.





மூத்த ஊடகர் தனபாலசிங்கம் அண் ணர் அவரைப்பற்றி ஒருமுறை எழுதுகை யில் வடமராட்சியில் “ரிப்போர்ட்டரைக் கண்டீர்களா என்றால் அது தில்லை நாதனையே குறிக்கும் என்றதை இங்கு நினைவூட்டுவது பொருத்தமாகும்.

அவர் செய்தி அனுப்புவதில் மட்டு மன்றி, கொழும்பிலுள்ள ஊடக நிறு வனங்களிலும் யாழ்ப்பாணத்திலுள்ள இடம்பெறும் பதவிநிலை மாற்றங்கள் உள்விவகாரங்கள் பற்றியும் அறிந்து சொல்லும் ஒரு ரிப்போர்ட்டராகவே அன்று முதல் இன்றுவரை திகழ்ந்து வருகிறார்.



கடந்த ஐம்பத்தேழு வருட கால ஊடக அனுபவங்களை மட்டுமன்றி இத்த கைய விவரங்களையும் தாம் ஊடகத் தில் சேர்வதற்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்வுகளையும் சுவையாகச் சொல்லும் ஆற்றல் மிக்கவர்.

மூத்த பத்திரிகையாளரும் முரசு இதழ்களின் பிரதம ஆசிரியருமான வித்தி யாதரன், தில்லை அண்ணரை ஓர் “ஊடகக் களஞ்சியம்” என்று ஒருமுறை குறிப்பிட்டது அவருக்குச் சாலவும் பொருந் தும்.

தமது அனுபவ ரீதியான ஆலோசனை களை யார் எவர் என்றும் பாராமல் வெட் கப்படாமல் வழங்குவார். அந்த நபர் புதி தாக நுழைந்த இளம் நிருபராகவும் இருக்க லாம் அல்லது பத்திரிகை ஆசிரியபீடத் தில் உள்ள ஒருவராகவும் அமையலாம். தில்லைநாதனின் இந்த அப்பழுக்கற்ற ஆர்வம்மிக்க இந்த “அட்வைஸ்களை” சகிக்க முடியாத ஆசிரிய பீடங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். அதனால் அவரது செய்திகள் “கட்” பண்ணுப்பட்ட அனுபவங்களும் அவருக்கு உண்டு.

உதயன்பத்திரிகை தொடங்கும்வேலை கள் நடைபெற்றுக்கொண்டிருந்தபொழுது ஒருமுறை அலுவலகத்துக்கு வந்தவர் அதன் பிரதம ஆசிரியர் கானமயில் நாதனுக்கு அவர்கள் வடக்கில் எங்கு எங்கு நிருபர்களைப் போடவேண்டும் என்றும், எந்த எந்த இடங்களை இலக்கு வைத்து உள்ளூர்ச் செய்திகளை ஆரம்பத்தில் வெளியிடவேண்டும் என்றும் தனது “ஆலோசனையை”ச் சொல்லிக்கொண் டிருந்தார். ம.வ. கானமயில்நாதன் இவர் சொன்னதைக் கதையாகக் கேட்டதாக மட்டுமன்றி தாமும் சில கேள்விகளைக் கேட்டுக் குறித்துக் கொண்டிருந்தார். எனக்கு நல்ல ஞாபகம், ம.வ.கானமயில் நாதன் இவரிடம், அடுத்து இனி எப்போ வரப்போகிறீர் என்று சொல்லி ,அடுத்த முறை வாரும் நான் செலவுக்கு ஏற்பாடு

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி ▲

# பவளவிழா காணும் தில்லை!



செய்கிறேன் –என்று சொன்னார்.

உதயனின் வருகையிலும் பின்னர் போர்ச் சூழலில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளின் காலப் பகுதியிலும் உதயனுக்கு அவர் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் சாவகச்சேரி என்று ஓடித்திரிந்து ஆற்றிய பணிகளிலும் அவரது வகிபாகம் என்பது குறித்துச் சொல்லப்படவேண்டிய தொன்றாகும்.

நான் உள்ளூர்ப் பத்திரிகை நிருபராக ஈழநாடு ,தினபதி,சிந்தாமணிக்குப் பணியாற்றிய காலத்தில் அவர் வீரகேசரியின் புலோலி நிருபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். எனது அண்ணர் அமரர் சுபேந்திரன் எண்பதுகளில் தினபதிக்கும் ஈழநாட்டுக்கும் நிருபராகப் பணியாற்றிய காலப்பகுதியில் எங்கள் வீட்டிலிருந்து செய்தி எழுதுவதற்கும் செய்திகளை ஒருவருக்கொருவர் பரிமாறுவதற்கும்அடிக்கடி வருவதால்தில்லைநாதன் எங்கள் குடும்ப நண்பரானார். என்னைவிடத் தமது சம வயதுக்கால நண்பர்களான எனது சகோதரர்கள் சுபேந்திரன், றூபன் ஆகியோருடன் நட்புடன் பழகியவர்.





கரவெட்டித் தபால் நிலையம் எங்கள் வீட்டுக்கு முன்னால் அமைந்திருந்தது. அக்காலத்தில் அஞ்சல் பொதிகளைப் பருத்தித்துறையிலிருந்து ஒவ்வொரு அஞ்சல் அலுவலகங்களாக ஏற்றி வரும் தபாற் பஸ் (மெயில்பஸ்) கரவெட்டிப் "போஸ்ட் ஒபிசுக்கு" சுமார் மாலை ஆறே கால் மணிக்கு வருவது வழக்கம். மெயில் பஸ் கடைசியாகத் தாண்டும் வடமராட்சியின் அஞ்சல் நிலையமாக கரவெட்டித் தபால் நிலையம் அமைந்ததால், தினகரன், ஈழநாடு, வீரகேசரி, மித்திரன், தினபதி, வானொலி ஆகிவற்றின் நிருபர்களாயிருந்த எஸ். ஜே. ஜெயக்குமார் , எஸ்.தில்லைநாதன் , சிலவேளைகளில் ஏ. என். எஸ். திருச்செல்வம் ஆகியோர் எங்கள் வீட்டிலிருந்து செய்திகளை எழுதி முடித்துவிட்டு எம் வீட்டின் கூப்பிடு தூரத்திலிருந்த அஞ்சல் அலுவலகத்தின் முன் காத்து நின்று மெயில் பஸ்ஸில் அவற்றைச் சேர்த்துவிட்டுச் செல்வது வழக்கம்.

ஈ – மெயில் எனப்படும் மின்னஞ்சல் இல்லா யுக காலத்தில் மெயில் பஸ்ஸும் ,அந்த மெயில் பஸ்ஸில் வரும் மெயில் பொக்ஸ்ஸும் – அன்றைய ஊடக உலகில் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாகத் திகழ்ந்த காலமும் தில்லை அண்ணரின் எழுபத்தைந்து வருடங்களுக்குள் அடங்கும்.

செய்தி கொடுக்கும் முறையில் மறறொரு வழக்கம் தொலைபேசி மூலமானது. செல்லிடத்தொலைபேசி வராத காலம் அது. அக்காலத்தில் இணைக்கப்பட்ட தொலைபேசி வசதி என்பது ஊருக்கு ஊர் குறைவாகவே காணப்பட்டது. நெல்லியடி கரவெட்டி பருத்தித் துறைப் பகுதியைப் பொறுத்தவரை வர்த்தக நிலையங்கள், அரச நிறுவனங்கள், பிராந்தியத் தொலைத்தொடர்பு அதிகாரிகளின் இல்லம் என்றே நிருபர்களாகிய நாம் செய்தி கொடுப்பதற்கு ஏறி இறங்கினோம்.

நாம் சேகரிக்கும் முக்கிய செய்திகளை உடுப்பிட்டிப் நாடாளுமன்ற உறுப்பினரான அமரர் இராசலிங்கம் வீட்டிலிருந்தும் அனுப்புவோம். தில்லைநாதன் புலோலியில் இருந்து சைக்கிளில் இதற்காக மூசி மூசி மூச்செறிந்து வெயில், மழை மின்னல் என்றும் பாராது வதிரியிலுள்ள இராசலிங்கம் வீட்டுக்கு வருவார்.

அந்தத் தொடர்பு வசதியில்லாததால் யார் யார் எந் நேரம் எம். பி. வீட்டுக்குப் போவதென்பது தெரியாது. அதனால், பெரும்பாலும் அவர் என்னிடம் வந்து செய்தியைப் பகிர்ந்து இருவரும் சேர்ந்து தொலைபேசியில் செய்தி வழங்குவதற்காக ஒன்றாகச் செல்வதுண்டு.

இவையெல்லாம் தில்லைநாதன் அனுபவித்த கடந்த ஊடக யுகத்தின் நாள்கள்.

இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் செய்தியை பத்திரிகைகளுக்கு அனுப்ப முதல் "நீர் என்ன கொடுக்க போறீர்? அதைச் சொல்லாதேயும், நான் கொடுக்கேல்ல" என்று ஆலோசனைகள் கூறி செய்தியைத் திடப்படுத்திக்கொண்டே "சரி இனிக் கொடுப்போம்" என்பார்.

அவர் அனுப்பி வெளியிடப்பெற்ற செய்தி தொடர்பாக அவரது பத்திரிகை அலுவலகத்தில் இருந்து கேள்வி அல்லது விளக்கம் கோரி வந்தால், அதேவேளை மறுநாள் மற்றப் பத்திரிகையிலும் அதனோடு ஒத்த தன்மையுள்ள செய்தி வந்திருந்தால் இருவருக்கும் பிரச்சினை இல்லை என்பதே அதன் நோக்கமாகும்.

தில்லையிடம் நான் கற்றுக்கொண்ட பாடம் இது.

கொழும்பிலிருந்து அமரர்கள் நடராஜா (வீரகேசரி) , க. தா. சிவகுருநாதன் (சிந்தாமணி), இரத்தினசிங்கம் (தினபதி), பாலச்சந்திரன் (வீரகேசரி ) மற்றும் தனபாலசிங்கம் (வீரகேசரி), ஜெயராஜ் (ஐலண்ட்) போன்ற ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் ஊருக்கு வந்தால் தில்லைநாதன் மகிழ்ச்சி மிக்கவராகக் காணப்படுவார். இவர்கள் ஊருக்கு வரும் செய்தியை எமக்குத்தரும் "ரிப்போர்ட்டர்" அவர்தான். இவருடன் சேர்ந்து நானும் போய் இவர்களைச் சந்தித்துள்ளேன்

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் இளையோர்களின் வகிபாகம், சாதியப் பிரச்சினைகள், சாதிய போராட்டங்கள், இடதுசாரி இயக்கங்கள், அமைச்சர் பதியுதீன் உள்பட அமைச்சர்கள் வருகை, கறுப்புக்கொடி, கல்லெறி, இளைஞர் இயக்கங்கள், விடுதலை உணர்வாளர்கள் கைதுகள் இயக்கங்களின் தோற்றம், அவற்றின் முரண்நிலை, வடமராட்சி லிபரேஷன் ஒப்பரேஷன், இந்திய இராணுவம், பல்வேறு இயக்கங்களின் காலம் என அவர் கண்ட அனுபவங்கள் பலப் பல.

பலருடனும் தொடர்பான ஒருவர், அடிக்கடி தொலைபேசி மூலம் யாரையும் தொடர்பு கொள்பவரைக் கம்பத்தில் வெவேறு இயக்கங்களால் துரோகியாகக் காட்டப்படும் (கட்டப்படும்) அல்லது நிலத்தில் கிடத்தப்பட்டுச் சுடும் வழக்கம் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பாக வடமராட்சியில் ஓரம்சமாகவிருந்தது.

தில்லை அண்ணர் இவற்றையெல்லாம் தாண்டியமை ஊடகத்துறை பெற்றபேறே.

நான் கரவெட்டி உடுப்பிட்டிப் பகுதியில் அரசியல் கூட்டங்களுக்குச் சென்று பேச்சுக்களை எடுத்துவருவேன். அவர் பருத்தித்துறை பகுதியின் செய்திகளைச் சேகரிப்பார். நான் தினபதிக்கு அதற்குரிய பாணியில் செய்தியை எழுதுவேன். ஆனால் அவர் நான் எழுதியவற்றில் சிலவற்றை, அவை செய்திச் சுவைக்கு முக்கியமானதாக இருந்தால் கூட வீரகேசரிக்கு எழுத மாட்டார். தொலைபேசியிலும் அறிவிக்க மாட்டார். எனது வயது ஆர்வத்துக்கு அதனை அனுப்ப வேண்டும் போல இருக்கும். சிலவேளைகளில் அமிர்தலிங்கம் சிவசிதம்பரம்

தொடர்ச்சி ▼

# பவளவிழா காணும் தில்லை!

தொடர்ச்சி ▲

இராசலிங்கம், ஆலாலசுந்தரம் போன்ற தலைவர்களும் பிரமுகர்களும் கூட்டத்தில் உரையாற்றினால், தில்லைநாதன் அவர்கள் பேசி முடிந்தபின்னர் அவர்களை அணுகி "இப்படிச் சொல்லியிருக்கிறீர்கள், போடலாமா? "என்று கேட்டுவிட்டு வந்து என்னிடம் , 'அந்த விடயத்தைப் போடவேண்டாமாம் தம்பி, அதனைத் தவிரும்' என்று சொல்வர்.



அப்போது இன்றைய "யூட்டியூப்" பர்களைப்போல எதுவென்றாலும் உடனுக்குடன் அனுப்பவேண்டும் என்ற இளம் இரத்தம் ஓடும் ஊடகனாக இருந்த எனக்கு, இவர் ஒரு பயந்த மனப்பான்மை கொண்டவர் போலத் தோன்றியது. காலப்போக்கில் என்னுடனும் அவரது அந்தப் பழக்கம் தன்னையறியாமலே இணைந்தது .

இந்தக் காலத்து ஊடகவியலாளர்கள் இந்த அறத்தை ஓரளவுக்கேனும் கடைப்பிடித்தாலும், சமூக ஊடகங்களும் அவற்றின் ஊடகர்கள் எனப்படுபவர் களும் இதனை ஒருபோதும் கடைப்பிடிக்கப் போவதில்லை என்பதையே நாம் இன்று காண்கிறோம். சமூக நிறுவன உள்ளூராட்சிச் சபைகள் போன்றன இத்தகைய 'யூட்டியூபர்'களுக்குத் தில்லை அண்ணர் போன்றவர்களைப் பயன்படுத்தி அவர்களின் சமூகம் சார்ந்த பொறுப்பை உணரச் செய்து அவர்களின் பொறுப்புணர்ச்சியை மேம்படுத்தல் அவசியமாகும்.

தில்லைநாதன் அண்ணர் நீதிமன்றச் செய்திகளிலும் அனுபவம் மிக்க ஒருவராகவிருந்தார். கமலம் கொலை வழக்கு , கம்பர் மலைக் கொலை வழக்கு எனப் பல கொலைவழக்குகளின் செய்தியாளராக இவர் பணியாற்றியுள்ளார். குட்டிமணி தங்கதுரை ஜெகன் ஆகியோர் மணற்காட்டில் கைதான செய்தியை இறுதி நேரத்தில் கொடுத்து ஏற்கனவே ஆயிரக்கணக்கான பத்திரிகைப் பிரதிகள் அச்சான நிலையில் அதனை நிறுத்தி முதற்பக்கத்தை மாற்றிய அனுபவத்தையும் கண்டவர்.

கமலம் கொலைவழக்கு நடைபெற்ற காலத்தில் இவரும் எனது சகோதரரும், ஜெயக்குமார் அண்ணரும் , திருச்செல்வம் அண்ணரும் செய்தி எழுதும் முறை சுவாரசியமானது . இன்றைய ஊடகர்கள் இத்தகைய அனுபவங்களைப் பெறுவதற்கு நவீன தொழில் நுட்ப மாற்றம் இடம் தரவில்லை. ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கை எழுதிக்கொண்டு வந்து கொடுக்க மற்றவர்கள் எழுதி முதற்பந்தியை மாற்றி ஒவ்வொரு நாளிதழ்களுக்கும் அவற்றின் மொழி நடை, வரிகளின் அமைப்பு, செய்தி வழங்கும் முறை என்பவற்றுக்கு ஏற்ப அனுப்பிய நாள்கள் அவை.

பாடசாலை நாள்களில் பத்திரிகைகளின் நிருபராகவிருந்த அவரது ஆசிரியர் கொடுத்துவிடும் செய்தி அடங்கிய தபாலைக் கொண்டு சென்று தபாலகத்தில் சேர்க்கும்போது தொடங்கிய அவரது இதழியல் ஆர்வம் பல தசாப்தகாலமாக இத்தொழிலின் நாடி நரம்புகளையே அறிந்திருக்கும் ஆர்வமிகு ஆற்றலை அவருக்கு வழங்கியிருந்தது.



2007 இல் மகாராஜா நிறுவனத்தில் ஒரு தமிழ் நாளிதழை வெளியிட எண்ணம் உருவானபோது அதற்கான பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. வடக்கில் பிராந்திய ரீதியான ஒரு செயற்பாட்டைப் பற்றிய எண்ணம் வந்தபோது, நான் தில்லைநாதன் அண்ணரையே தொடர்பு கொண்டேன். அவரது ஆலோசனை மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. அந்தப் பணி தொடர்ந்திருக்குமானால் நல்லதொரு நாளிதழை தமிழ் ஊடக வரலாற்றில் உருவாக்கிட் பணியாற்றினேன் என்ற பெருமை எனக்கும் மகாராஜா நிறுவனத்துக்கும் கிடைத்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

எப். எம். 99 தனியார் பண்பலை வானொலி தொடங்கியபோது, அதன் செய்தியாளராகப் பணியாற்றினார். அப்போது எப். எம். 99 இன் பணிப்பாளராயிருந்த அமரர் தில்லைநாதன் இவருக்கு அந்த வாய்ப்பை வழங்கினார் . சூரியன் எப். எம். 1998 இல் ஆரம்பமானபொழுது அதன் செய்தி ஆசிரியராகவிருந்த அமரர் காசி நவரத்தினம் இவரையும் எனது தமையனார் றூபனையும் யாழ்ப்பாண நிருபர்களாக நியமித்திருந்தார். சக்தி எப் எம் தொடங்கியபோது அதன் வடமராட்சி நிருபராகப் பணியாற்றினார்.

இவற்றுடன் தொடர்ந்தும் தமது இதழுடகப்பணியை வீரகேசரி, தினபதி தினகரன், உதயன், ஈழநாடு என இன்றும் ஆற்றிக்கொண்டிருக்கிறார்.

தில்லைநாதன் என்ற தமிழ் ஊடகக் களஞ்சியத்தின் பயனுள்ள தகவல்களை, இளம் ஊடகவியலாளர்களுக்கு மட்டுமன்றி இளம் அரசியல் வாதிகளுக்கும் வழங்கி , தமிழினத்தின் சீரான பண்பு மிக்க அரசியற் பயணத்துக்கு ஏற்ற சமூக அறம் மிக்க ஊடகத்துறையை உருவாக்க அரசியல், சமூக ஊடக நிறுவனங்களின் கற்கைவள ஒருங்கிணைப்பாளர்கள் அவரை உரிய முறையிற் பயன்படுத்துவதே அவரது எழுபத்தைந்தாவது பிறந்த நாளுக்கு உரிய சிறப்பாக அமையும்.

பருத்தித்துறை பிரதேசசெயலகத்தின் வாழ்நாள் விருது முதல் மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலையம் விருது , திக்கம் மத்திய சனசமூக நிலையம், காந்தியூர் சனசமூக நிலையம், குரும்பைகட்டி சனசமூக நிலையம், வடமராட்சி ஊடக ஒன்றியம் ஆகிய உள்ளூர் சமூக நிலையங்களால் வழங்கப்பெற்ற விருதுகள், இலங்கைக் கல்வி அமைச்சு, வட மாகாண சபையின் கலாசார அமைச்சு, இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றால் வழங்கப்பெற்ற கௌரவங்களும் விருதுகளும் அவரது சேவையை என்றும் வாழ்த்தி நிற்பவை.

தில்லைநாதன் அண்ணருக்கு எங்களது வாழ்த்துக்கள் அவரது பிறந்த நாளில் உரித்தாகுக!




# கடவுச்சீட்டை பெற இடைத்தரகருக்கு பணம் கொடுப்பதனை தவிர்க்கவும்

கடவுச்சீட்டு விண்ணப்பத்தை ஒப்படைப்பதை துரிதப்படுத்துவதற்கும் விரைவாக கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்கும், எந்தவொரு இடைத்தரகருக்கும் பணம் கொடுப்பதனை தவிர்க்குமாறு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பொதுமக்களைக் கோரியுள்ளது.

அதன்படி, கடவுச்சீட்டுக்காக செலுத்த வேண்டிய கட்டணத்தைத் திணைக்களத்தின் சிறாப்பர் கருமபீடத்தில் மாத்திரம் செலுத்தி, பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டு, கடவுச்சீட்டு விநியோக கரும பீடத்தில் மாத்திரம் கடவுச்சீட்டை பெற்று கொள்ள, நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதன்படி, ஜுன் 2 ஆம் திகதி முதல், பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில், ஒரு நாள் மற்றும் சாதாரண சேவைகளின் கீழ் கடவுச்சீட்டு வழங்குவதற்கான, டோக்கன் அட்டைகள் வழங்கும் பணி காலை 6.30 முதல் பிற்பகல் 2 மணி வரை முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன், ஒரு நாள் சேவைக்காக அன்றைய தினத்துக்கு, நேர முன்பதிவு செய்த விண்ணப்பதாரர்களும், அவசர அல்லது முன்னுரிமை தேவைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களும், இந்த காலப்பகுதியினுள் ஒரு நாள் சேவையின் கீழ் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

இதனிடையே, குறித்த காலப்பகுதியில் கடவுச்சீட்டு பெறுவதற்கு வருகை தரும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், டோக்கன் அட்டைகள் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, முதல் நாள் இரவிலிருந்து, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முன், வரிசையில் நிற்க வேண்டிய அவசியமில்லை.

உரிய நாளில் காலை 6 மணிக்குப் பின்னர் வந்து, அனைத்து தேவைகளையும், இடையூறு இல்லாமல் பூர்த்தி செய்ய முடியும் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

# போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்காக 03 புதிய மத்திய நிலையங்களை நிறுவ தீர்மானம்

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்காக 03 புதிய மத்திய நிலையங்களை நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, குருநாகல் மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் அந்த மத்திய நிலையங்கள் நிறுவப்படவுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் சுஜித் கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து செல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களை அடையாளம் காண்பதற்காக நாடுமுழுவதும் ஆய்வுகள் ஆரம்பிக்கப்படும் எனவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு ஆளாகாமல் தடுக்க விழிப்புணர்வு திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.




# கிணற்றல் தவறி விழுந்த குழந்தை உயிரிழப்பு

(எஸ். ரகுதீஸ்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீட்டுக்கு கிணற்றல் தவறி விழுந்த இரண்டு வயது ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

நேற்று சனிக்கிழமை மாலை கிணற்றடி வைரவர் கோவிலடி, குரும்பைகட்டி, புலோலியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இரண்டு தினங்களிற்கு முன்னர் தனது பிறந்த நாளை கொண்டாடிய அனுசயன் வயது இரண்டு என்ற ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

கிணற்றில் விழுந்த நிலையில் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது குழந்தை ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

குழந்தையின் சடலம் மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

இந்த மாதத்தின் முதல் 26 நாள்களில் 116,469 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

இந்தியாவில் இருந்தே அதிக சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவர்களின் எண்ணிக்கை 32,997 ஆகும். அத்தோடு, இந்த காலக்கட்டத்தில் சீனா, பிரித்தானியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 9 நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, அந்த வருடத்தில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை1,146,272 என சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் வீதியுலா சென்றார்

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் ஆலய தெப்பதிருவிழாவை முன்னிட்டு சண்டிகாபரமேஸ்வரி தாயார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை ஆலயத்தில் இருந்து எழுந்தருளி பருத்தித்துறை நகர் ஊடாக தும்பளை வீதி வழியே கொட்டடி கடற்கரைக்கு வீதியுலா சென்றார்.















# வவுனியா பல்கலையும் LOLC General and Life காப்புறுதிநிறுவமும் புரிந்துணர்வு ஒப்பந்தம்

வவுனியாப் பல்கலைக்கழகம் மற்றும் LOLC காப்புறுதி நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உத்தியோக பூர்வமாக கையெழுத்திட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது. இந்த ஒப்பந்தம் கல்வி மற்றும் தொழில் துறை இடையிலான ஒத்துழைப்பை முயற்சியாக அமையும், குறிப்பாக மாணவர்களின் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்துவது, பயிற்சி வாய்ப்புகளை ஏற்படுத்துவது மற்றும் கல்வி மற்றும் தொழில்முறை நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது என்பவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த நிகழ்வுக்கு வவுனியா பல் சிரேஸ்ட பேராசிரியர் ஏ. அற்புதராஜா, வியாபாரக்கற்கைள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் யோ. நந்தகோபன் ஆகியோர் தலைமை தாங்கினர்.



இந்நிகழ்வின் இணைப்பாளராக சிரேஸ்ட விரிவுரையாளர் சி.சிவநேந்திரா செயற்பட்டார்.

LOLC காப்புறுதி நிறுவன பிரதிநிதிகளாக தர்ஷன மால்தேனிய, முகவர் மேம்பாட்டு மற்றும் நிர்வாகத் துறைத் தலைவர்,

நடீஷ் தீரசேகர, மனிதவள முகாமையாளர் மற்றும் அகிலன் சந்திரராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகம் சார்பாக எஸ்.ஏ. யூட் லியோன் (சந்தைப்படுத்தல் முகமைத்துவ துறையின் தலைவர்) வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொழில்நுட்ட கற்கைகள் பீட பீடாதிபதி செந்தூரன், பதிவாளர், உதவிப் பதிவாளர், சி. சிவநேந்திரா மற்றும் துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்ள் கலந்து கொண்டனர்.







# விண்வெளி வீரர் ஷுபன்ஷுவுடன் பிரதமர் மோடி கலந்துரையாடல்

சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள இந்தியாவின் குரூப் கேப்டன் ஷுபன்ஷு சுக்லாவுடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடியுள்ளார்.

அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த காணொலி பதிவில்,

"குரூப் கேப்டன் ஷுபன்ஷுசுக்லா உடனான உரையாடல் அற்புதமாக இருந்தது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து அவர் தனது அனுபவங்களை என்னோடு பகிர்ந்து கொண்டார். அந்தச் சிறப்புக் கலந்துரையாடலை நீங்களும் பாருங்கள்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த உரையாடலின்போது, "நீங்கள் இந்தியாவில் இருந்து வெகு தொலைவில் இருக்கிறீர்கள். ஆனால், இந்தியர்களின் மனதில் மிக நெருக்கம் கொண்டுள்ளீர்கள். உங்களின் இந்த வரலாற்றுப் பயணம், விண்வெளி ஆய்வு மாணவர்களின் உத்வேகத்தைக் கூட்டும்." என்று ஷுபன்ஷுசுக்லாவிடம் பிரதமர் மோடி கூறினார்.

அப்போது, சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து பூமியை பார்க்கும்போது உணர்ந்த தருணத்தை பிரதமர் மோடியிடம் விவரித்த ஷுபன்ஷு சுக்லா, "பூமி முழுவதும் எல்லைகள் ஏதுமின்றி ஒன்றாகத் தெரிகிறது. நாம் வரைபடத்தில் பார்ப்பதை விடவும் இந்தியா மிகவும் பெரிதாகத் தெரிகிறது." என்று வியப்புடன் பகிர்ந்தார்.

முன்னதாக, நாசா, இஸ்ரோ மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை ஆகியவற்றுடன் இணைந்து வர்த்தக ரீதியான விண்வெளி திட்டத்தை அமெரிக்காவின் அக்சியம் ஸ்பேஸ் என்ற நிறுவனம் தயாரித்தது. ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மூலம் 4 வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்துக்கு (ஐ.எஸ்.எஸ்) அனுப்பி, 2 வார காலம் ஆய்வு பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.





இந்த திட்டத்தில் இஸ்ரோ சார்பில் பயணிப்பதற்கு, ககன்யான் திட்டத்துக்காக ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டிருந்த விமானப்படை விமானியான ஷுபன்ஷு சுக்லா தேர்வு செய்யப்பட்டார். அவருடன் அமெரிக்காவின் பெக்கி விட்சன் (கொமாண்டர்), ஹங்கேரியின் திபோர் கபு, போலந்தின் ஸ்லாவோசி உஸ்னான்ஸ்கி ஆகிய வீரர்களும் இத்திட்டத்தில் இணைந்தனர்.

அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் ரொக்கெட்டுடன் இணைந்த டிராகன் விண்கலம் மூலம் இந்த குழுவினர் கடந்த 25 ஆம் திகதி விண்வெளிக்கு புறப்பட்டனர். டிராகன் விண்கலம் 28 மணி நேர பயணத்துக்கு பிறகு, சர்வதேச விண்வெளி மையத்தில் இணைந்தது. டிராகன் விண்கலத்தில் வந்த ஷுபன்ஷுசுக்லா உள்ளிட்ட 4 வீரர்களையும், சர்வதேச விண்வெளி மையத்தில் ஏற்கெனவே தங்கி ஆய்வு பணி மேற்கொண்டு வரும் குழுவினர் கட்டியணைத்து வரவேற்றனர்.

டிராகன் குழுவினர் 2 வார காலத்துக்கு அங்கு தங்கியிருந்து, பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். உணவு தானியங்கள், பாசிகளை வளர்த்தல், நுண்ணிய நீர்வாழ் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியங்கள், புவி ஈர்ப்பு விசை இல்லாத சூழலில் மின்னணு கருவிகள் மூலம் மனிதர்கள் உரையாடுவது, விண்வெளி சூழலில் ஊட்டச்சத்து, தாவரங்களின் பாரம்பரிய பண்புகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது உட்பட மொத்தம் 60 ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். அதன்பிறகு, டிராகன் விண்கலத்தில் பூமிக்கு திரும்ப உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் நரேந்திர மோடிக்கு 'தர்ம சக்ரவர்த்தி' பட்டம்

சமண துறவி ஆச்சார்யா ஸ்ரீ 108 வித்யானந்த் ஜி மகாராஜின் நூற்றாண்டு விழாவில் பிரதமர் நரேந்திர மோடிக்கு 'தர்ம சக்ரவர்த்தி' பட்டம் வழங்கப்பட்டது.

டில்லியில் உள்ள பகவான் மகாவீர் அஹிம்சா பாரதி அறக்கட்டளையுடன் இணைந்து மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்த சமண துறவி ஆச்சார்யா ஸ்ரீ 108 வித்யானந்த் ஜி மகாராஜின் நூற்றாண்டு விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் பிரதமர் மோடிக்கு 'தர்ம சக்ரவர்த்தி' பட்டம் வழங்கப்பட்டது.



இந்த விழாவில் பேசிய பிரதமர் மோடி,

"இந்த சந்தர்ப்பத்தில், நீங்கள் எனக்கு 'தர்ம சக்ரவர்த்தி' பட்டம் வழங்கி கவுரவித்தீர்கள். நான் இதற்கு தகுதியானவன் என்று கருதவில்லை. ஆனால், துறவிகளிடமிருந்து நாம் எதைப் பெற்றாலும், அதை 'பிரசாதமாக' ஏற்றுக் கொள்வது நமது கலாச்சாரம். எனவே, இந்த 'பிரசாதத்தை' நான் பணிவுடன் ஏற்றுக்கொண்டு, அதை மா பாரதிக்கு அர்ப்பணிக்கிறேன்.

இந்தியா உலகின் பழமையான உயிர்ப்பான கலாச்சாரத்தை கொண்டது. நமது கருத்துகள் அழியாதவை, நமது எண்ணங்கள் அழியாதவை, நமது தத்துவம் அழியாதவை என்பதால் நாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அழியாதவர்களாக இருக்கிறோம். இந்த தத்துவத்தின் ஆதாரம் நமது முனிவர்கள், துறவிகள் மற்றும் ஆச்சார்யர்கள் ஆவர்."– என்றார்.

# பாகிஸ்தானில் தற்கொலைப் படை தாக்குதல்: 16 இராணுவத்தினர் பலி; 20 பேர் காயம்

பாகிஸ்தானில் தாலிபான்கள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 16 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஆப்கனிஸ்தானில் தாலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த 2021 முதல் பாகிஸ்தானில் தாலிபான்களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. பாகிஸ்தான் தாலிபான் என்ற தனி அமைப்பு இந்த தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், ஆப்கனிஸ்தானை ஒட்டிய கைபர் பக்துன்வா மாகாணத்தின் வடக்கு வஜீரிஸ்தான் மாவட்டத்தில் இராணுவ வாகனங்கள் மீது வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை தற்கொலைப் படைத் தீவிரவாதி மோதியதில், இராணுவ வீரர்கள் 16 பேர் கொல்லப்பட்டனர். மேலும், பொதுமக்கள், உள்ளூர் அரசாங்க அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் உள்பட 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பெயர் வெளியிட விரும்பாத உள்ளூர் அரசு அதிகாரி ஒருவர்,



"ஒரு தற்கொலைப் படை தீவிரவாதி வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை இராணுவ வாகனங்கள் மீது மோதியதில் 16 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். முந்தைய தாக்குதலின்போது 13 பேர் உயிரிழந்த நிலையில், தற்போது எண்ணிக்கை அதைவிட அதிகமாகி உள்ளது." என தெரிவித்துள்ளார்.

"இந்த தாக்குதலில் இரண்டு வீடுகளின் கூரைகள் இடிந்து விழுந்தன. இதில், ஆறு குழந்தைகள் காயமடைந்தனர்" என்று மாவட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் தாலிபான்களின் ஒரு பிரிவான ஹபீஸ் குல் பகதூர் ஆயுதக் குழுவின் தற்கொலைப் படைப் பிரிவு பொறுப்பேற்றுள்ளது.

கைபர் பக்துன்க்வா மற்றும் பலுசிஸ்தானில் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடும் ஆயுதக் குழுக்களால் இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் இதுவரை சுமார் 290 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், இவர்களில் பெரும்பாலானவர்கள் பாதுகாப்பு அதிகாரிகள் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

# காசாவில் ஒரு வாரத்தில் போர் நிறுத்தம் ஏற்படும்

## ட்ரம்ப் நம்பிக்கை

காசாவில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான மோதலில் ஒரு வாரத்திற்குள் போர் நிறுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று நம்புவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

காங்கோ – ருவாண்டா ஒப்பந்தத்தைக் கொண்டாடும் ஓவல் அலுவலக நிகழ்வில், இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர்நிறுத்தம் நெருங்கிவிட்டதாக தான் நம்புவதாக ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கூறினார்.

இது குறித்து வெள்ளை மாளிகையில் அவர் பேசுகையில்,

"இஸ்ரேல் ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் நெருங்கிவிட்டது என்று நினைக்கிறேன். சம்பந்தப்பட்ட சிலரிடம் நான் இப்போதுதான் பேசினேன். அடுத்த வாரத்துக்குள் போர் நிறுத்தம் ஏற்படும் என்று நாங்கள் நினைக்கிறோம்." என்றார்.

ஆனால், போர் நிறுத்தம் குறித்து யாரிடம் பேசி வருகிறோம் என்ற தகவலை ட்ரம்ப் வெளியிடவில்லை.

இஸ்ரேல் உடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தத்தில் தங்கள் வசமுள்ள பணயக்கைதி



களை விடுவிக்கத் தயாராக இருப்பதாக ஹமாஸ் கூறியுள்ளது. ஆனால், ஹமாஸ் ஆயுதங்களை முழுமையாக கைவிட்டால் மட்டுமே போரை முடிவுக்கு கொண்டுவருவோம் என்று இஸ்ரேல் தெரிவித்தது. இருப்பினும் ஆயுதங்களை கைவிட முடியாது என ஹமாஸ் மறுத்து வருகிறது.

2023 ஒக்டோபர் 7 அன்று ஹமாஸ் இஸ்ரேலைத் தாக்கி 1,200 பேரைக் கொன்று, 251 பணயக்கைதிகளை பிடித்துச் சென்றதால் காசாவில் போர் தொடங்கியது. 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதிக்குப் பிறகு இஸ்ரேலின் இராணுவத் தாக்குதலில் 56,000 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என காசாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஈரான் இடையே அமெரிக்காவின் முன்மொழிவின் பேரில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், காசாவிலும் அமைதி திரும்ப வேண்டுமென பல்வேறு நாடுகளும் கோரிக்கை வைத்து வருகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் -29.06.2025




இன்று நீங்கள் உங்களின் அறிவுத் திறனை இழக்க நேரும். உங்கள் பேச்சில் பதற்றமும் வேதனையும் பிரதிபலிக்கும். பிரார்த்தனை நல்ல பலனைத்தரும்.

பணியில் மந்த நிலை காணப்படும். முறையான திட்டமிடல் இருந்தால் நீங்கள் சிறப்பாக செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடனான உங்களின் அணுகு முறையில் ஈகோ பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

தேவையில்லாத செலவுகளால் மனக் கவலைகள் ஏற்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் கூடுதலாக இருக்கும்.

மூட்டு வலி அல்லது தோள்களில் வலி போன்ற உபாதைகள் ஏற்படலாம். பதற்றத்திலிருந்து விடுபட தியானம் மேற்கொள்ளுங்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.




இன்றைய நாளில் மோசமான சூழ்நிலை காணப்படும். அவற்றை சமாளிப்பதற்கு போதுமான தைரியம் இழந்து காணப்படுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நிறைந்திருக்கும். அதை மாற்றி நேர்மறையாக்குங்கள்.

இன்று வேலையில் மும்மரமாக இருப்பீர்கள். இணக்கமான அணுகுமுறை இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடித்து வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலின் காரணமாய் நல்லுறவை பராமரிக்க முடியாது. இது மகிழ்ச்சியை சீர் குலைக்கும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். குறைந்த அளவே நிதி காணப்படுவதால் உங்கள் பொறுப்புகளை பூர்த்தி செய்ய இயலாது.

பதற்றமும் உணர்ச்சிவசப்படுதலும் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். சாந்தமாக இருப்பது உங்கள் உடல் நலத்துக்கு நல்லது.




இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாளாக இருக்க வாய்ப்பில்லை. ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். இன்று மனதை அமைதியாகவும் சமநிலையுடனும் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணியில் முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். இன்று உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை திணிப்பீர்கள். நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள அத்தகைய உணர்ச்சிப்பூர்வமான போக்குகளை தவிர்ப்பது நல்லது.

பணஇழப்பு காணப்படுகின்றது. உங்கள் அலட்சியமான போக்கால் நீங்கள் பணம் இழக்க நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சிறிய அளவிலான உடல் உபாதைகள் அவர்களிடம் காணப்படலாம். அதற்காக நீங்கள் பணத்தை செலவு செய்ய நேரலாம்.




இன்றைய நாள் நீங்கள்விரைந்து முடிவெடுப்பதற்கு சாதகமாக அமையும். உங்களின் உறுதியான மற்றும் தைரியமான மனநிலை மற்றும் அதனுடன் சேர்ந்த உங்கள் திறமை காரணமாக உங்கள் இலட்சியத்தில் நீங்கள்வெற்றி காண்பீர்கள்.

இன்று குறித்த நேரத்தில்பணிகளை முடிக்க இயலாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதம் இருக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையுடனான நல்லிணக்கத்தை மேம்படுத்த உதவும்.

பணவரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க போதுமான பணம் காணப்படும். உங்கள் தேவைகளுக்காக சிறு கடன்கள் வாங்குவீர்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை நல்ல ஆரோக்கியத்துடன் வைத்திருக்க உதவும்.




இன்று அழுத்தமான சூழ்நிலைகளும் வெற்றிக்கு குறைந்த வாய்ப்புகளும் காணப்படுகின்றன. தினசரி அலுவல்களை எச்சரிக்கையான அணுகுமுறையுடன் கையாளவும்.

உங்களிடம் காணப்படும் குறைந்த தன்னம்பிக்கை காரணமாக திறமையாக பணிகளை ஆற்றுவது கடினம். இதனால் பணிகளில் தொய்வு காணப்படும். புணியாற்றும் முறைகளை திட்டமிடுவது நல்லது.

புரிந்துணர்வில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படும்.உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்று வீணான செலவுகள் செய்வதற்கான சாத்தியம் உள்ளது. குடும்பத்துக்காக கூடுதல் செலவினங்களை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால்களில் வலி காணப்படலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். தினசரி செயல்களை மேற்கொள்வதும் கூட இன்று கடினமாக இருக்கும். களிப்பான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் இன்று நற்பலன்களைக் காணலாம்.

பணிகளில் தவறுகள் நேரலாம். பணிகளில் தவறுகள் நேராமல் தடுக்க உங்கள் நிலைமையை உத்தேசித்து உங்கள் செயல்திறனை மேம்படுத்த வேண்டும்.

பாதுகாப்பின்மை என்ற உணர்வு உங்களை பாதிக்கும். அதனை உங்கள் துணையிடத்திலும் வெளிப்படுத்துவீர்கள். இது உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் சேர்ந்து இன்றைய நாளை கழிப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்திக்கொள்ளுங்கள்.

செலவுகள் பெருகி காணப்படும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு நீங்கள் கடன் வாங்குவீர்கள்.

சளித்தொல்லைகளால் பாதிப்புகள் ஏற்படலாம். குளுமையான உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் செயல்களில் உணர்ச்சிவசப்படக் கூடாது. அமைதியாக இருந்தால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். வெளியிடங்களுக்குச் செல்வது ஆறுதலை அளிக்கும்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான செயல்திறன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்களின் அகந்தையான போக்கை காண்பிப்பதால் உறவின் நல்லிணக்கம் சீர்குலையும். மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள அத்தகைய உணர்வுகளை தவிர்த்துவிடுங்கள்.

தேவையில்லாத செலவினங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் உங்கள் செலவு செய்யும் பழக்கத்தை கட்டுப்படுத்துவது அவசியம். நிதியின் ஸ்திரத்தன்மையை பராமரிக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

தொடை மற்றும் கால்களில் வலி காணப்படலாம்.யோகா மேற்கொள்வது சிறந்த பலனைத்தரும்.




உறுதியுடனும் தைரியத்துடனும் செயல்பட்டு இன்று செயல்களில் வெற்றி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்களின் பணியாற்றும் முறையில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் செய்த பணிக்காக நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடிகளாய் மகிழ்ச்சியையும் களிப்பையும் அனுபவிப்பீர்கள்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். உங்களுக்கு ஆழ்ந்த திருப்தி உண்டாகும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளுமின்றி முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -29.06.2025




முக்கியமான விஷயங்களை நிறைவேற்றுவதற்கு உகந்த நாள். ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

உங்கள் பணிவளர்ச்சியில் தடைகள் காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் பணிகளைக் கையாண்டால் பணிச்சுமைகளை கையாளலாம்.

உங்கள் துணையுடனான நேர்மையான போக்கு அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இந்த நேர்மை சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள வழிவகுக்கும்.

பணம் அதிகம் பெறுவதற்கான அதிர்ஷ்டம் உள்ளது. கணிசமான தொகையை சேர்ப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆன்மீக சக்திகளின் காரணமாக ஸ்திரமான ஆரோக்கியத்தை நீங்கள் பராமரிக்க முடியும்.




உங்கள் நலன்களை ஊக்குவிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதற்கு இன்று உகந்த நாள். இன்று நீங்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல நட்பான உறவுமுறையை வளர்த்துக் கொள்ள உதவும்.

நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களின் சிறந்த மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று அறிவுப்பூர்வமான அணுகுமுறையுடன் விஷயங்களை கையாள வேண்டும். வெற்றி அடைவதற்கு நீங்கள் கடினமான முயற்சியுடன் போராட வேண்டும்.

உங்கள் செயல்திறன் மூலம் பணியில் நல்லபலன்கள்கிடைக்கும்.உங்கள்மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

மோதல்கள் ஏற்டாமல் இருக்க உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளில் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.

இன்று முக்கியமான நிதி முடிவுகளை எடுப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. பெரிய முதலீடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அதில் நல்ல வருமானம் கிடைக்காது.

பல்வலி அல்லது செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். ஆரோக்கியத்தில் சிறந்த கவனம் செலுத்துங்கள்.




இன்று முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களுடைய உறுதியான முயற்சியால் நீங்கள் மேற்கொண்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மனஆற்றலும் நேர்மறையான எண்ணங்களும் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

பணியில் தவறுகளைக் குறைக்கும் வண்ணம் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கவனச் சிதறல்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்வீர்கள். இது உங்கள் இருவருக்கிடையேயான உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

நிதிநிலைமை ஸ்திரத்தனமையுடன் காணப்படும். கையில் உபரி பணம் காணப்படும். அதை ஆக்க பூர்வமான வகையில் பயன்படுத்துவீர்கள்.

எந்தவிதமான உபாதைகளும் காணப்படாது.தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.


எந்தக் காலத்திலும்.. எந்த வடிவத்திலும்
உங்களோடு நாங்கள்...



செந்தியின்
தமிழன் வழிகாட்டி
Tamils' Guide
Since 1996
416-615-4646 info@tamilsguide.com
www.tamilsguide.com